
# அரங்காலயா
# ARANGALAYA

**PERFORMING**
ART THEATRE GROUP

மானுடம் வெல்லும்

# தகவல் சிற்றேடு

# THEATRE INFORMATION BROCHURE



**2008**



பேராசிரியர் **கா.சிவத்தம்பி** அவர்களுடன் அரங்க அனுபவங்கள் தொடர்பாக கலந்துரையாடி ஆலோசனைகள் பெற்றபோது...



தமிழக நாடக இயக்குநரும் திரைப்படத்துறையைச் சார்ந்தவருமான **திரு. பிரளயனின்** பயிற்சி முகாமில் பங்கு பற்றியபின் அவருடன் நாம்...
திருகோணமலை - 2004

# எமது தூரநோக்கு
# VISION

சமூக மாற்றத்திற்கான அரங்கப் பண்பாட்டுப் பயணத்தினூடாக மனிதப் பண்பாட்டை வென்றெடுத்து மானுட விடுதலையை அடைதல்.

# எமது இலட்சியநோக்கு
# MISSION

சமூக மாற்றத்திற்கான துறைசார் அரங்கச் செயற்பாடுகளை முன்னெடுத்தலும் கல்வி, சமூக மட்டங்களில் பன்முக ஆளுமையுள்ள செயலாளிகளைத் தயார்ப்படுத்துதலும்.

# எமது செயற்பாட்டு முறைகள்
# OUR ACTIVITIES

- பயிற்சிப் பட்டறை / களப்பயிற்சி
  Workshop
- கருத்தரங்குகள், வெளியீடுகள்
  Seminar, Publications
- அரங்க ஆற்றுகைகளை நிகழ்த்துதல்
  Theatre Performance
- பாடசாலைகள், கிராமங்களில் அரங்கக் குழுக்களை அமைத்தலுடன், தொடர் அரங்கச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்.
  Formation of Theatre Group

ஆரோக்கியமான அரங்கப் பண்பாட்டு நடவடிக்கைகளுக்கூடாக சமூக மாற்றத்தைத் தரிசிக்க முடியும் என்ற சர்வதேசிய சிந்தனையில் இலட்சியப் பற்றுறுதி கொண்ட அரங்கச் செயலாளிகளின் கூட்டிணைவே அரங்காலயாவின் அமைப்பாக்கம் ஆகும்.

நாடகம் எமது பண்பாட்டில், பிரிக்கமுடியாத நிகழ் கலை வடிவம். நாடகம் அது மனித உணர்வுகளோடு ஊடாடுகிறது. அரங்கு மக்களை ஆகர்சிக்கும் கூட்டுக் கலையாகும்.

மனித வாழ்வுக்கும் நாடகத்துக்குமான உறவு உன்னதமானது. எம்மிடையே கலைமுறையாக நிகழ்ந்த நாடகம், கடந்த இரு தசாப்தத்திற்கும் மேலாக, பாடசாலைகளிலும், பல்கலைக்கழக மட்டத்திலும் கற்கை நெறியாக பயிலப்பட்டு வருகிறது. இப்போது நாடகம் கல்வி முறையாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய அரங்க அனுபவங்களை முன்னுதாரணமாகக் கொண்டு, சமுதாய அபிவிருத்தித் துறைகளில் நாடகம், அதன் பல்வேறு பரிமாணங்களுடன் அரங்கச் செயற்பாடாக அனுபவ, ஆளுமையா ளர்களினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

உலக அரங்க வரலாற்றில் அகஸ்தாபோல், ஃபிறக்ட் போன்றோரின் தற்புதுமையான அரங்க நடவடிக்கைகள் சமூகத்தில் பல புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இவர்களின் மாற்றுக் கல்வி அரங்கு, விவாத அரங்குகள், அபத்த அரங்குகள், கட்புலனாகா அரங்கு, தளைநீக்க அரங்கு போன்ற புதிய அரங்க முயற்சிகள் மக்களிடையே சிந்தனைத் தெளிவை ஏற்படுத்தியது எனலாம்.

எமது சூழலிலும், இன்று அரங்கு, ஒரு தாக்க வன்மையான ஊடகமாக பிரயோகிக்கப்பட்டு வருகிறது. இவ் அரங்கச் செயற்பாடுகள் மூலம் எமது கல்வியிலும், சமூக அபிவிருத்தியிலும் ஒரு புத்துயிர்ப்பு நிகழ்கிறது என்பது துலாம்பரமாகும்.

மனிதன் தன்னைத் தான் கண்டறிவதற்கு அரங்கு ஓர் அற்புதமான ஊடகமாகிறது. "நீ உன்னை அறிந்தால், உலகத்தில் போராடலாம்" என்ற கவிஞர் கண்ணதாசனின் வரிகளுக்கும் "உன்னையே நீ அறிவாய்! உன்னையே நீ அறிவாய்!" என்ற சோக்கிரட்டீசின் தத்துவத்துக்கும் அடிப்படையான அனுபவம் அரங்க வெளியில் செயற்படுகிறபோது சாத்தியமாகிறது.

இந்தக் கண்ணோட்டங்கள், அனுபவப் புரிதல்களோடுதான், நாமும் எமக்கான **அரங்கவெளியில்** செயற்பட முனைந்திருக்கிறோம்.

சமூக மாற்றத்துக்கான எமது பன்முக அரங்க நடவடிக்கை களுக்கூடாக நாம் மக்களை ஆற்றல்படுத்தி வருகிறோம். ஆரோக்கியமான அரங்கப் பண்பாட்டுச் சூழல் ஒன்றைக் கட்டியெழுப்பும் உன்னதமான மானிட அபிவிருத்திப் பணியில், கடந்த காலங்களில் நாம்; கல்வி, சிறுவர், உளச்சமூக, சமுதாய, பெண்ணிய துறைகளில் ஆசிரியர், மாணவர்களுக்கும், சமூக களப்பணியாளர்களுக்கும் நூறுக்கும் மேற்பட்ட அரங்கப் பயிற்சிப் பட்டறைகளை நடாத்தியுள்ளோம்.

சமூக மாற்றத்துக்கான கருத்துருவாக்கங்களின் அடிப்படையில் பல்வேறு கருப்பொருள்களில் நாம் அரங்க ஆற்றுகைகளை நிகழ்த்தி வருகிறோம். தற்போது வவுனியா, புத்தளம் பிரதேசங்களில் சிறுவர் உரிமைகள் மேம்பாடு, பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பில் Unicef இன் அனுசரணையோடு கிராம அபிவிருத்தி நிறுவனத்துடன் (RDF) இணைந்து இருநூறுக்கும் மேற்பட்ட அரங்க ஆற்றுகைகளை கிராமத்து வெளிகளில் தொடர்ந்து நிகழ்த்தி வருகிறோம்.

மனிதப்பண்பாட்டை மேம்படுத்தும் இச் சமூகமாற்றத்திற்கான அரங்கப் பயணத்தில் ஆற்றலுக்கான ஆற்றுகையில் இணைந்து செயற்பட ஆர்வமும், விருப்பமும் கொண்டோரை நேசக்கரம் நீட்டி வரவேற்கிறோம்.

**"மானுடம் வெல்லும்"**

# எமது பிரயோக அரங்கின் இயங்கு தளங்கள்

- ❖ கல்வியில் அரங்கு
  THEATRE IN EDUCATION
- ❖ தலைமைத்துவ ஆளுமை விருத்திக்கான அரங்கு
  LEADERSHIP THEATRE PERFORMANCE
- ❖ சமுதாய அபிவிருத்திக்கான அரங்கு
  COMMUNITY DEVELOPMENT THEATRE PERFORMANCE
- ❖ பெண்ணிய அரங்கு
  WOMENT'S THEATRE PERFORMANCE
- ❖ முரண்தீர் அரங்கு
  CONFLICT THEATRE PERFORMANCE
- ❖ உளச்சமூக ஆற்றுப்படுத்தல் அரங்கு
  PSYCOSOCIAL THEATRE PERFORMANCE
- ❖ தலைநீக்கத்திற்கான அரங்கு
  INDEPENDANT THEATRE PERFORMANCE



❖ விட்டு விடுதலையாகி... அரங்க ஆற்றுகை
நகரசபை மண்டபம் வவுனியா - 2006.

# ஆற்றலுக்கான ஆற்றுகை
# அரங்காலயாவின் பயிற்சித் திட்டம்

❖ துறைசார் நிபுணர்களின் ஆலோசனை வழிகாட்டுதலோடு புத்துயிர்ப்பான அரங்கப் பயிற்சித் திட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளது.

❖ எமது பயிற்சி வள அணியினர் கோட்பாட்டு ரீதியிலான அறிவிலும் செயன்முறைப் பயிற்சியிலும் நிறைந்த அனுபவமுள்ளவர்களாவர்.

❖ ஈழத்திலும் தமிழகத்திலும் இயங்கிவரும் நவீன அரங்கவிய லாளர்களின் பயிற்சி முகாம்களில் பங்குபற்றியும் முன்னணி அரங்கச் செயற்பாட்டு அமைப்புகளோடு இணைந்து இயங்கிய அனுபவ ஆளுமையுள்ளவர்கள்.

❖ எமது பயிற்சி வள அணியோடு கல்வி, சமூக பொதுப்பணித் துறைகளில் சிறப்புற்று செயற்படும் பயிற்சி வளவாளர்களையும் ஒருங்கிணைத்து எமது பயிற்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

**நீங்களும்**

**ஆற்றலுக்கான ஆற்றுகை**

**திட்டத்தில் பயிற்சி பெற்று உங்களது ஆளுமைத் திறன்களை வளர்த்துக்கொள்ளலாம்.**

**பயிற்சி வள இணைப்பாளர்/ இயக்குநர்**
**இல:06, திருநாவற்குளம், வவுனியா.**
071-3283360, 077-6911428
E.mail: **arankalayaculturalgr @ yahoo.com**

# கல்வியில் அரங்கு
# Theatre in Education


மாறிவரும் புதிய உலக ஒழுங்கமைப்பின் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் எமது கல்வியில் அரங்கு செயல்வடிவம் கொள்கிறது.

சிறுவர் நாடகங்களைத் தயாரித்தல், சிறுவர் அரங்க விழாக்களை நடாத்துதல், சிறுவர் அரங்க செயற்பாடுகளை ஊக்குவித்தல், மகிழ்ச்சிகரமான, பரிகாரக்கற்றல், கற்பித்தல் ஊடகமாக அரங்கை எவ்வாறு பிரயோகித்தல் போன்ற விடயங்களில் பயிற்சித் திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.


- ❖ ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சி
- ❖ உளவளத்துணை ஆசிரியர்களுக்கான பயிற்சி
- ❖ சிறுவர்களுக்கான அரங்கக் களப்பயிற்சி
- ❖ மாணவர்களுக்கான தலைமைத்துவ ஆளுமைப் பயிற்சி



ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின் உள ஆற்றுப்படுத்தல் அரங்கச் செயற்பாட்டில் எமது குழு அம்பாறை - 2005.



சிறுவர் நாடகப் பயிற்சியின் போது - வவுனியா



முன்பள்ளி ஆசிரியர்களுக்கான அரங்கப் பயிற்சியில் பங்குபற்றும் ஆசிரியர்கள்
வவுனியா - 2005





வ/ஓமந்தைக் கோட்ட ஆசிரியர்களுக்கான எமது
பரிகாரக் கற்பித்தலில் அரங்கு - பயிற்சிப்பட்டறை 2007

# தலைமைத்துவ ஆளுமை விருத்திக்கான அரங்கப்பயிற்சி
# Leadership Theatre Performance


மனிதப்பண்பு விருத்தி, தொடர்பாடல், புதிதுபுனைதல் போன்ற தேர்ச்சித் திறன்களை விருத்தி செய்வதனூடாக படைப்பாக்கத் திறனையும் தலைமைத்துவ ஆளுமையினையும் வளர்ப்பதே இவ் அரங்கச் செயற்பாட்டின் பிரதான நோக்காகும்.

அவதானம், செவிமடுத்தல், கருத்தூன்றல், கற்பனையாற்றல், பேச்சாற்றல், மேடைஆளுமை, கருத்துக்களை உறுதியாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்துதல், பொதுசனஉறவுபேணல், சவால்களை எதிர்கொள்ளல் போன்ற தலைமைத்துவத் திறன்களை விருத்தி செய்யும் வகையில் இவ் அரங்கப் பயிற்சித் திட்டம் செயற்படுத்தப்படுகிறது.


## எமது வெளியீடு



| | | |
|---|---|---|
| நூல் | : | படிப்பினை |
| வெளியீடு | : | அரங்காலயா பண்பாட்டுக்குழு |
| முதற்பதிப்பு | : | 2002 கார்த்திகை |
| பதிப்புரை | : | அ. சத்தியானந்தம் |
| ஆசியுரை | : | பேராசிரியர் எஸ். மோகனதாஸ் |
| கட்டுரை | : | பேராசிரியர் கா. சிவத்தம்பி |
| பொருளடக்கம் | : | நான்கு நாடகங்கள் |



சிறுவர் கழக மாணவர்களுக்கான எமது தலைமைத்துவப் பயிற்சியின் போது - 2007



எமது தலைமைத்துவ ஆளுமை விருத்திக்கான அரங்கப் பயிற்சியில் பங்கு பற்றும் மாணவர்கள் வ/தாண்டிக்குளம் பிறமண்டு வித்தியாலயம் - 2007.

# உள சமூக ஆற்றுப்படுத்தல்
# அரங்கப் பயிற்சி
# Psycosocial Theatre Performance

உளநெருக்கீடுகளில் இருந்தும், மன அவலங்களில் இருந்தும் மனித மனங்களை மீட்டெடுப்பதற்கு எமது உளச்சிகிச்சை அரங்கு (Theatre Therapy) செயற்பாடு கைகொடுக்கிறது.

நெருக்கீடுகளுக்குள்ளாகி அவதிப்படுவோருக்கு எமது அரங்கினூடாக பாதுகாப்பான, சுதந்திரமான அரங்கச் சூழலை நாம் கட்டமைத்துக் கொடுக்கிறோம். உணர்ச்சி வெளிப்பாட்டுக்கும் உணர்வுப் பகிரலுக்குமான பொருத்தமான அரங்கியல் தூண்டிகளை நாம் செயற்படுத்தி பங்கு கொள்ளத் தூண்டுவதனூடாக உள ஆரோக்கியத்தை வலுப் படுத்துவதே இவ் அரங்கப் பயிற்சித் திட்டத்தின் செய்முறையாகும். விசேடமாக ஆசிரியர்களுக்கும், நெருக்கீடுகளுக்குட்பட்ட மாணவர் களுக்கும், உளச் சமூகப் பணிகளில் ஆதரவு நல்கி வரும் ஆற்றுப்படுத்து நர்களுக்கும் இவ் அரங்கப் பயிற்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகிறது.



ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின் உள ஆற்றுப்படுத்தலுக்கான அரங்கச் செயற்பாட்டில் நாம்...
(திருக்கோவில்) 2005.



பெருவெளியில் மக்களுடன் ஊடாடும் எமது அரங்கு



அரங்க ஆற்றுகையில் எமது பெண் ஆற்றுகையாளர்களின் வெளிப்பாடு
சிதம்பரபுரம், வவுனியா - 2004.

# சமுதாய அபிவிருத்திக்கான அரங்கப் பயிற்சி
# Community Development Theatre Performance

சமூக மாற்றத்திற்கு தடையாக விளங்கும் விடயங்களை இனங்கண்டு மக்கள் நலத் திட்டங்களில் அவர்களை பங்குபற்றுவதற்கான ஆற்றலை (Empower) எமது அரங்க ஆற்றுகைகள் ஏற்படுத்தி விழிப்புணர்வூட்டி வருகின்றது.


சமூகப் பிரச்சினைகளை இனங்கண்டு அவர்களின் பண்பாட்டுத் தளத்தில் விவாதித்து, மக்களின் செயற்பங்கினை மேம்படுத்தும் வகையில் எமது அரங்கு தெருவெளி அரங்காக, விவாத அரங்காக (Forum Theatre) கிராமத்து வெளிகளில் நிகழ்த்தப்பட்டு வருகிறது.




**விடியலின் விம்பங்கள்** சமூக வலுவூட்டலுக்கான தெரு வெளி அரங்கில் ஒரு காட்சி யாழ்ப்பாணம், 2004.



**விடியலின் விம்பங்கள்** சமூக வலுவூட்டலுக்கான தெரு வெளி அரங்கில்
ஒரு காட்சி மன்னார், 2003




எமது சமாதானத்துக்கான அரங்க ஆற்றுகை - மூதூர் 2004.


# பெண்ணிய அரங்கப் பயிற்சி
# Woments Theatre Performance

**பெ**ண்கள் தாம் கட்டுண்டு உழலும் குடும்ப, சமூக, அரசியல் தளைகளில் இருந்து மீண்டெழுந்து தம்மைத் தாம் கண்டுணர்ந்து ஆற்றல் பெறுவதற்கான ‘சுதந்திரமான அரங்க வெளியை’ எமது அரங்கப் பயிற்சிகள் கட்டமைத்துத் தருகிறது.

பால் மற்றும் பால்நிலைச் சமத்துவம், பெண்கள் உரிமைகள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள், பெண்ணிய சிந்தனைகளை எமது பண்பாட்டுத் தளத்தில் இனங்கண்டு புரிந்து கொள்ளவும் தீர்வுக்கான வழிவகைகளைத் தேடும் சமூக விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டமாகவும் எமது அரங்கப் பயிற்சிகள் அரங்க ஆற்றுகைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



சிறுவர் உரிமைகள் தொடர்பில் ஃ **விட்டு விடுதலையாகி...** அரங்க ஆற்றுகை
சிதம்பரபுரம், வவுனியா - 2006.



பெண்ணிய அரங்கக் களப்பயிற்சியில் ஒரு காட்சிப் படிமம் - 2005




சமூக வலுவூட்டலுக்கான அரங்க ஆற்றுகை - வவுனியா 2006

# முரண்தீர் அரங்கப் பயிற்சி
# Conflict Theatre Performance

முரண்பாடுகளும் நெருக்கடிகளும் மலிந்த சமூகத்தில் நாம் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றோம். சந்தேகம், பயம், அவநம்பிக்கைகளுடனேயே நாம் தினமும் மனித முகங்களோடு உறவாடுகின்றோம்.

பிரச்சினைகளை வெளிப்படையாகப் பேசித் தீர்ப்பதற்கு முன் நிபந்தனையாக ஆட்களுக்கிடையிலான நல் உறவை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. முரண்பாடுகளை முழுவிருப்பு நிலையில் நின்று, பேசித் தீர்ப்பதற்கான உணர்வுத் தளத்தினுள் அவர்களை உள்வாங்கி முரண்நடத்தைகளைப் புரிந்து கொள்ளும் மனப் பக்குவத்தை வளர்ப்பதற்கும் உணர்வு ரீதியாகவும் அறிவு ரீதியாகவும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான படிமுறையினை எமது அரங்கச் செயற்பாடுகள் ஊடாக பயிற்சியளிக்கிறோம்.



எமது **முரண்தீர்** அரங்க ஆற்றுகையில் ஒரு காட்சி மூதூர் - 2004.



ஒதுக்காதி ஒதுக்கன் ஆற்றுகையில் இனமுரண்பாடுகளை காட்சிப்படிமமாக வெளிப்படுத்துதல் மன்னார் - 2004.



**முரண்தீர்** அரங்கக்களப்பயிற்சியில் பங்குபற்றும் ஆற்றுகையாளர்களின் உடல் மொழி வெளிப்பாடு - 2004.


# தளைநீக்கத்திற்கான அரங்கப் பயிற்சி
# Independant Theatre Performance

ஒடுக்குமுறை அச்சத்தை அகற்றி, மக்களின் செயல் முனைப்பற்ற, மௌனப்பண்பாட்டைக் கலைத்து அவர்களை ஆற்றல்படுத்துவதே இவ் அரங்கின் பிரதான பணியாகும்.

வர்க்க, சமய, சாதீய, பெண்ணிய ஒடுக்குமுறைகளுக் கெதிராக மக்களை அணிதிரட்டி குரல் கொடுக்கவும் செயல்முனைப்புக் கொள்ளவும் இவ் அரங்கு சக்தி கொடுக்கிறது.



சிறுவர் உரிமைகள் அபிவிருத்தி தொடர்பில் ஃ **விட்டுவிடுதலையாகி......**
அரங்க ஆற்றுகை... வவுனியா- 2006.



பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பில் **துயரத் தீ** அரங்க ஆற்றுகையில் ஒரு காட்சி
கரம்பை - புத்தளம் - 2008



சமூக வலுவூட்டலுக்கான அரங்க ஆற்றுகை - புத்தளம் 2007.




அரங்கக் கலைஞர் கிங்ஸ்லிபெரேராவுடன் இணைந்து அரங்க ஆற்றுகைத் தயாரிப்பில் ஈடுபட்ட பின் அவருடன் எமது செயற்குழுவினர் - 2007.



சென்னைக் கலைக்குழுவின் இயக்குநர் திரு. **பிரளயன்** அவர்களின் நெறியாள்கையில் சமாதானத்திற்கான அரங்க ஆற்றுகையில் நாமும் - மூதூர் நகரசந்தை 2004



எமது அரங்க ஆற்றுகையாளர்கள் குழு




எமது கருத்தாடல் அரங்கில் மாவட்ட நீதிபதி உயர் திரு. எம். இளஞ்செழியன், முன்னாள் வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் திரு. சி. தண்டாயுதபாணி, அரசியல் ஆய்வாளர் திரு. சி. அ. யோதிலிங்கம். - 2005




**இயக்குநர்**

**இல:06, திருநாவற்குளம், வவுனியா.**

**071-3283360, 077-6911428**

**E.mail: arankalayaculturalgr @ yahoo.com**



*Designed & Printed By: NISA Arts (Pvt.) Ltd.*